UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1979-11-05
PERIODICALS DIVISION
LIBRARY

ஈரானிய அமெரிக்க தூதரகம் முற்றுகை!

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
EELANADU

மலர் 21 ஐப்பசி 19 ஜுல்ஹஜ் 14 இதழ் 266
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 5-11-79

Wolf MORTISE STAND
வூல்ப்
மின்சார
உபகரணங்களுக்கு
விஜயம் செய்யுங்கள்
வடமாகாணத்தக விநியோகஸ்தர்:
நியூதோன் எலெக்றிக்கல்ஸ்
141-143, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன் 7016.

ஷாவை அனுப்புமாறு தெஹ்ரானில் கோரிக்கை

(தெஹ்ரான்)

இங்குள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குள் நேற்று பலாத்காரமாக நுழைந்த ஈரானிய ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னாள் மன்னர் ஷாவுக்கு எதிராக முப்பது அமெரிக்க (தூதரக) அதிகாரிகளை பணயம் வைத்துள்ளனர் என்று நேற்றிரவு கிடைத்த கடைசி செய்திகள் தெரிவித்தன.

முன்னாள் ஈரானிய மன்னர் ஷாவை, மீண்டும் ஈரானுக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் வாக்குமூலம்!

பொலிஸாருக்கு தமிழ் வகுப்புகள்

சுன்னாகம் மாநாட்டில் யாழ். எஸ். பீ தகவல்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழி மூலம் முறைப்பாடுகளைப் பதிவதற்கும், வாக்குமூலங்களை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது''

சுன்னாகத்தில் நடந்த பொலிஸ்—பொதுமக்கள் நல்லுறவுக் கருத்தரங்கில் யாழ் பொலிஸ் அதிபர் திரு விக்கிரமசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுன்னாகம் [illegible] படமாளிகையில் சுன்னாகம் பொலிஸாரால் ஒழுங்குசெய்யப்பட்ட இக் கருத்தரங்கில் பொலிஸ் அதிபர் திரு விக்கிரமசூரிய மேலும் கூறியதாவது:

"எமது நாட்டில் இளைஞர்களின் கல்வி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளும், மொழிப்பிரச்சினையும் முக்கிய பிரச்சினைகளாக விளங்குகின்றன. பொலிஸ் நிலையங்களில் மொழிப்பிரச்சினையால் பொதுமக்களுக்கு இதுவரைகாலமும் இருந்து வந்த கஷ்டங்களை நீக்குமுகமாக யாழ்மாவட்டத்திலுள்ள பொலிஸ்நிலையங்களில் தமிழ் மொழிமூலம் முறைப்பாடுகளைப் பதிவதற்கும் வாக்குமூலங்களை எடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளேன்.

பொலிஸ் நிலையத்தில் தமிழ் வகுப்புகள்

"யாழ் மாவட்டத்திலுள்ள பொலிசார் இப்பகுதி மக்களின் மொழியாகிய தமிழ் மொழியைப் பயிலுவதற்காக யாழ் பொலிஸ் நிலையத்தில் தமிழ்வகுப்புகள் நடாத்தப்பட்டுவருகிறது. 50க்கு மேற்பட்ட பொலிஸார் இவ்வகுப்புகளில் பங்குபற்றி வருகின்றனர்.

சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியும் மற்றும் பொலிஸாரும் இப்பகுதிப் பொதுமக்களின் ஒத்துழைப்போடு குற்றச்செயல்களை தடுப்பதில் பெரும் சேவையாற்றி வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு நான் ஆயத்தமாகவிருக்கின்றேன்''

சுன்னாகம் பொலிஸ் அதிகாரி

சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு பொ சுரேந்திரன் கூறியதாவது:

"சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் வாழும் சுன்னாகம் பொலிஸ்பகுதியில் 30 பொலிசார் மட்டுமே கடமையாற்றுகின்றனர். குற்றச்செயல்களை ஒழித்து அமைதிநிலை நிலைநாட்டுவதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே முடியும்.

5000 பேருக்கு ஒரு பொலிஸ்

"ஒரு பொலிஸ் ஊழியர் ஐயாயிரம் மக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாக்க வேண்டிய நிலையிலிருக்கிறார். ஒரு தனிமனிதனால் இவ்வளவு பேரைக் காப்பாற்றுவதென்பது எவ்வளவு கடினம் என்பதை நாம் உணரவேண்டும். பொலிஸார் மிகுந்த கஷ்டத்துக்கு மத்தியிலேயே கடமையாற்றவேண்டி இருக்கிறது. ஆதலால் பொதுமக்களின் ஒத்துழைப்பு எவ்வளவுக்கு இருக்கிறதோ, அவ்வளவுக்கு பொலிசாரின் ஒத்துழைப்பும் இருக்கும்''

சட்டத்தரணி திரு கு. [illegible] உரையாற்றுகையில் கூறியதாவது:

"முன்னைய அரசாங்கம் ஒவ்வொரு கிராமங்களிலும் இணக்க சபைகளை அமைத்திருந்ததன் மூலம் கிராம மக்களிடையே ஏற்படுகின்ற சிறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக் கூடியதாயிருந்தது. இதனால் பொலிசாருக்கும் வேலைக்கஷ்டம் குறைந்திருந்தது. இப்போதைய அரசாங்கம் அப்படியான இணக்கசபைகளை கலைத்துவிட்டதால் பொதுமக்கள் சாதாரண பிரச்சினைகளுக்கும் பொலிஸ் நிலையங்களை நாடிச் செல்லவேண்டியிருக்கிறது. இதனால் பொலிசாருக்கு வேலைக் கஷ்டம் அதிகரித்துள்ளது'' என்றார்.

மற்றும் இம்மாநாட்டில் உதவி அரசாங்க அதிபர்கள், லயன்ஸ் கிளப் உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், ஓய்வுபெற்ற நீதிபதிகள், கல்லூரி அதிபர்கள், மதகுருமார், கிராமசேவையாளர்கள், கி. மு. சங்க சமாச உறுப்பினர்கள், பெரியார்கள், நலன்புரி கண்காணிப்புச்சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரும் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

உதவிப் பொலிஸ் அதிபர் திரு இசுறுபாலாவும் கலந்துகொண்டார். சுன்னாகம் பொலிஸ் சார்ஜன்ட் திரு வி வேலாயுதபிள்ளை நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

(பண்ட: நிரு. ஈ)

லொறி விபத்து: பாலகன் பலி!

(கோண்டாவில்)

வீட்டு வளவிற்குள் குழை ஒடித்துக் கொண்டிருந்த வயோதிபர் அருகே நின்ற ஐந்து வயதும் பாலகனை; பாதையை விட்டு விலகிய லொறியொன்று ஸ்தலத்திலேயே பலிகொண்டது!

இச் சம்பவம், தாவடி உபதபால் கந்தோருக்கு முன்பாகவுள்ள வீடொன்றில் நேற்று மாலை இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது: "மானிப்பாயில் இருந்து யாழ்ப்பா

(6- பக்கம் பார்க்க)

மோட்டார் சைக்கிளில்

தந்தையுடன் சென்ற மைந்தன் பலி!

(யாழ்ப்பாணம்)

தந்தையுடன் மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்திலிருந்து சென்ற மகன் வழியில் ஏற்பட்ட பஸ் விபத்தில் பலியானார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 13 வயதான இராசையா சிவசுப்பிரமணியத்தின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் எஸ் பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

சம்பவம் நடந்ததினம் தந்தையுடன் மோட்டார்சைக்கிளில் யாழ்ப்பாணம் வந்துவிட்டு திரும்பிச்சென்றபோது காரைதீவு என்ற இடத்தில் பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் பலத்த காயத்திற்குள்ளான மகன் யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ஐயாத்துரை, சார்ஜன்ட் புஞ்சிபண்டா ஆகியோர் சாட்சிகளை ஆஜர்செய்தனர்.

பஸ் சாரதியான மு பொன்னுத்துரை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு விசாரணை 8-ம் தேதிக்கும் பின்போடப்பட்டுள்ளது.

(கொ)

"ஒப்பெக்'' நிறுவனத்துக்கு

இலங்கை மக்களின் ஒரு பாரிய மனு!

(கொழும்பு)

எண்ணெய் விலையைக் குறைக்குமாறு கோரி, "ஒப்பெக்'' நிறுவனத்துக்கு இலங்கை மக்களின் சார்பில் அனுப்பப்படவுள்ள விண்ணப்பமனு சம்பந்தமான மனு தயாரிப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன.

விண்ணப்ப மனுக்கள் பொதுமக்களுக்கு இம்மாதம் 6ம் திகதி முதல் விநியோகிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்ப மனுக்களில் ஜனாதிபதி அமைச்சர்கள், எம்பிக்கள், அரச அலுவலர்கள் உட்பட 30 லட்சம் பேர் கையொப்பமிடுவர். விண்ணப்ப மனுக்களை விநியோகிக்கும் பணிகளை சகல மாவட்டச் செயலகங்களும் நிறைவேற்றும்.

விண்ணப்ப மனுக்களில் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு மக்கள், எண்ணெய் விலை அதிகரிப்பால் அனுபவிக்கும் கஷ்டங்களை விளக்கியுள்ளனர்.

(ந)

கடலில் வீழ்ந்தது

(ஹூஸ்டன்)

அமெரிக்க விண்வெளிச் மதியான 'பெகாசஸ்' அத்திலாந்திச் சமுத்திரத்தில் வீழ்ந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

வரி விளம்பரம்

விற்பனைக்கு

புதிய C 185 கொண்டசு ரேட் மாஸ்ரர் மோட்டார் சைக்கிள் 9 ஸ்ரீ 9577 விற்பனைக்குண்டு. க. சிவபாதசுந்தரமூர்த்தி, நவக்கிரி, புத்தூர். 3965

நவம்பர் மாத சித்திரம் விற்பனையாகிறது. நாதஸ்வரமேதை பத்மநாதனின் சிறப்புப் பேட்டி, பல சுவையான அம்சங்கள். ச. கிருஷ்ணசாமி, பழையமார்க்கட்டு கடைத்தொகுப்பு, பெரியகடை, யாழ்ப்பாணம். 4012

பயிற்சி

தொழில் பயிற்சி! விசேஷமானதோர் வெல்டிங் பயிற்சி தொழில் புரிவோருக்கென ஐந்தாம் திகதி ஆரம்பமாகின்றது. வெளிநாடுகளில் தொழில் பெறுவதற்கு ஏற்ற முறையில் நடாத்தப்படும். தேசிய தொழிற்பயிற்சி நிலையம், 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 3968

ராடா பென்ஸ்

லொறி விற்பனை

கேள்விப்பத்திரம்

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 24 ஸ்ரீ 9640 இலக்க ராடா பென்ஸ் லொறி விற்பனைக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. [illegible] விரும்புவோர் பொதுமுகாமையாளர், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி என்ற [illegible] சிட்டையிடப்பட்டு தபால் மூலம் 15-11-1979க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கேள்விப்பத்திரம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் லொறி கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரத்துடன் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக ரூபா 250-00 செலுத்திய பற்றுச்சீட்டு இணைத்தல் வேண்டும். லொறியை பார்வையிட விரும்பின் கிழமை நாட்களில் முன் அறிவித்தல் கொடுத்தால் எமது சங்க கராஜில் வைத்து பார்வையிட ஒழுங்கு செய்து தரப்படும்.

பொது முகாமையாளர்,
பூநகரி ப. நோ. கூ. சங்கம்
3998 பூநகரி.

நவீன இஸ்லாமிய ஆராய்ச்சி நிறுவனம்

(கொழும்பு)

பத்து லட்சம் ரூபா செலவில் நவீன இஸ்லாமிய ஆராய்ச்சி நிறுவனமொன்று விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

நவீன மாநாட்டு மண்டபம், நூலகம், பார்வையாளருக்கான வசதிகள் கொண்ட கலையரங்கம் என்பனவற்றை உள்ளடக்கியதாகவும் இது அமைக்கப்படும்.

டிபிபேர்க் அவனியூவில் இதற்கான காணி ஒதுக்கப்படும். அக்காணியை இம்மாதம் 22ந் திகதி பிரதமர் திரு ஆர். பிரேமதாசா போக்குவரத்து அமைச்சரிடம் கையளிப்பார். இவ்வைபவம் ஹிஜ்ரி விழாவின் ஒரு பகுதியாக அமைகிறது. (நா)

தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. ச.

இளைஞர் ஒன்றிய அணி வெற்றிபெற்றது

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழுத் தேர்தலில் கொடிகாமம் இளைஞர் ஒன்றியத்தின் ஆதரவுடன் போட்டியிட்ட மூவரும் வெற்றிபெற்றனர்.

யாழ் உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. பொ. கனகநாதன் தலைமையில் நேற்று முன்தினம் சங்க மண்டபத்தில் நடந்த விசேட பொதுக் கூட்டத்தின் பின்னர் இத்தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் இளைஞர் ஒன்றியத்தின் ஆதரவுடன் போட்டியிட்ட ஆசிரியர் க. வேலுப்பிள்ளை, திரு கி. கந்தசாமி, திரு கி. செல்லையா ஆகியோர் வெற்றிபெற்றனர். 3 இடத்திற்கான இத்தேர்தலில் 6 பேர் போட்டியிட்டனர்.

7 பேரைக் கொண்ட சங்க நெறியாளர் குழுவில் 5 பேர் இளைஞர் ஒன்றியத்தின் ஆதரவுடன் வெற்றிபெற்றவர்களாவர். (ந)

பாராளுமன்றத்தில்

பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

பாராளுமன்றத்தில் கடமை புரிவோருக்கு, அவர்களை இலகுவில் இனம் கண்டுகொள்ளத்தக்க வகையில் புகைப்படத்தினைக் கொண்ட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

பாராளுமன்றப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸாருக்கும், பாராளுமன்ற அதிகாரிகளுக்கும் கிடைக்கும் வசதிகள் அனைத்தையும் பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நா)

தென்னாசிய வியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 52-வது தென்னாசியவியல் கருத்தரங்கு வரலாற்றுத் துறைக்கருத்தரங்கு அறையில் நடைபெற்றது.

பீகிங் பல்கலைக்கழகத்துப் பேராசிரியரும், தென்னாசியவியல் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் லியூ-சின்-வூ 'சீனாவில் தென்னாசியக் கல்வியின் தற்போதைய நிலை' என்ற பொருளில் கருத்துக்களை வழங்கினார். இக்கருத்தரங்கிற்கு தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திரு. க. கைலாசபதி தலைமை தாங்கினார்.

வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. இந்திரபாலா நன்றி தெரிவித்துப் பேசுகையில் "இங்கு நடைபெறும் தென்னாசியவியல் கருத்தரங்குகளில் பல பிறநாட்டுப் பேராசிரியர்கள் பங்குகொண்டுள்ளனர். அந்தவகையில் சீனப்பேராசிரியர் ஒருவர் கலந்துகொண்டமை அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்ற விடயமாகும்" என்றார்.

கலாநிதி அ. சண்முகதாஸ், திரு சிலன் கதிர்காமர், பேராசிரியர் க. கைலாசபதி, வ. ஐ. ச. ஜெயபாலன் ஆகியோர் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர். கூட்டத்தில் சீனப்பேராசிரியர் அன்பளிப்புச்செய்த இரு நூல்களில் ஒன்று சுவாமி விவேகானந்தரைப்பற்றியதாகும். அது சீன மொழியிலேயே பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவரது படமும் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு நாள் யாழ் தென்னாசியவியல் கருத்தரங்கிலே இச் [illegible] [illegible] [illegible] பல்லின [illegible] நிலைக்கும் வழங்கினார். (ந)

மிருசுவில்

பெண்கள் குடியேற்றத் திட்டத்தில் சுயவீடமைப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

"மிருசுவில் படித்த பெண்களுக்கான திட்டம், 1967ம் ஆண்டு 50 படித்த பெண்களுடன் 50 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டு இன்று 177 படித்த பெண்களை உள்ளடக்கியுள்ளது. ஏனைய படித்த வாலிபர் திட்டங்களைப் போலன்றி உங்களது இந்தத் திட்டம் பல விதங்களிலும் சிறப்புடையது என்று நான் அறிகிறேன்"

இவ்வாறு யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு யோகேந்திரா துரைசுவாமி மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத்திட்ட சுயஉதவி வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவில் பேசும்போது தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உதவி ஆணையாளர் திரு எஸ். இராமநாதன், மாவட்டக் காணி அதிகாரி திரு எம். குலநாயகம் ஆகிய அரசாங்க அதிகாரிகளும் சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினமும் கலந்துகொண்டனர்.

திரு. வ. ந. நவரத்தினம் பேசும்போது, இத்தகைய வீடமைப்புத் திட்டங்கள் மிக அத்தியாவசியமானவை என்றும், விவசாயத்துறையில் ஈடுபட்ட பெண்களுக்கு மேலும் உற்சாகமூட்டுமெனவும் குறிப்பிட்டு இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியை இவ்வீடமைப்புத் திட்டத்துக்கான முதற்கல்லை நாட்டி வைக்குமாறு வேண்டிக்கொண்டார். அவரது வேண்டுகோளுக்கிணங்க அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி நாட்டி வைத்தார். இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினரும் ஏனைய அதிகாரிகளும் கல் நாட்டினார்கள். (நா)

சாவகச்சேரி நகராட்சி மன்றம்

1980ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

1-1-80 தொடக்கம் 31-12-80 வரையிலான காலப்பகுதிக்கு கீழ்க்குறிப்பிடப்படுவனவற்றிற்கான கேள்விகள் இரு பிரதியில் 16-11-79ம் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை-1

விபரம்	கேள்விவைப்புப்பணம்	படிவக்கட்டணம்
1. வண்டி வாசல் சாலைக்குத்தகை	ரூ. 100-00	ரூ. 10-00
2. இரட்டைமாட்டு வண்டி மூலம் இந்நகரசபை எல்லைக்குள் கட்டப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு	100-00	10-00
3. நகரசபைக்குச் சொந்தமான சந்தைகளிலுள்ள சாணியை அள்ளி எடுப்பதற்கு	100-00	10-00

அட்டவணை-11

வியாபாரம்	கடை இல	சென்றவருடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித்தொகை	கேள்விவைப்புப் பணம்	படிவக்கட்டணம்
1. மாட்டிறைச்சிக்கடை	எச் யூ 1	ரூ 9000/-	ரூ. 300-00	ரூ. 25-00
2. மாட்டிறைச்சிக்கடை	எச் யூ 2	ரூ 6200/-	ரூ. 300-00	ரூ. 25-00
3. ஆட்டிறைச்சிக்கடை	என் எம் எஸ் 1	ரூ 6200/-	ரூ. 200-00	ரூ. 25-00
4. ஆட்டிறைச்சிக்கடை	என் எம் எஸ் 2	ரூ 5677-77	ரூ. 200-00	ரூ. 25-00
5. பலசரக்கு/[illegible]/சைவத் தொழிற்சாலை	என் எஸ் எஸ் 3	ரூ 2160/-	ரூ. 100-00	ரூ 10-00
6. " "	என் எஸ் எஸ் 4	ரூ 2460/-	ரூ. 100-00	ரூ. 10-00

மேற்படி வைப்புப்பணமும் கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன்பேரில் 15-11-79ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் திருப்பித்தரமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும் கேள்விவைப்புப் பணம் திருப்பித் தரப்படும். கேள்விவைப்புப் பணமும் படிவக் கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

முறைப்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விகள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம் அல்லது பதிவுக் கடிதம் மூலம் அனுப்பப்படலாம். எவற்றிற்கு கேள்வி விடுக்கப்படுகிறது என்ற விபரம் கேள்விகள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுமேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையுமோ எவற்றையேனுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி நகரசபைத் தலைவருக்கு உண்டு.

சென்ற வருடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வித் தொகையிலும் பார்க்கக் குறைவான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இரு மாட்டிறைச்சிக்கடைகளின் சித்திகர கேள்விக்காரர்கள் இருவரும் ஒப்பந்தம் செய்த பின்பே இக்கடைகளில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவர். ஒரு கடையின் சித்திகர கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்து மற்றைய கடையின் சித்திகர கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்யத்தவறின் இரு கடைகளின் கேள்விகளும் இரத்துச் செய்யப்பட்டு புதிதாகக் கேள்விகள் கோரப்படும். இரு கடைகளுக்குமான ஒப்பந்தங்கள் செய்த பின் எக்காரணம் கொண்டும் ஒரு கடையின் ஒப்பந்தம் இரத்துச் செய்யவேண்டி நேரிடின் மற்றைய கடையின் ஒப்பந்தமும் இரத்துச் செய்யப்பட்டு இரு கடைகளுக்கும் மீண்டும் புதிதாக கேள்விகள் கோரப்படும்.

ஆட்டிறைச்சிக் கடைகளுக்கும் மேற்படி நிபந்தனை பொருந்தும்.

முன்னைய வருடங்களில் தவறுனராகச் சபையால் கருதப்பட்டவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்கள் இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். கே. திரவியநாயகம்,
தலைவர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்.
சாவகச்சேரி, 31-10-79.

(4005)

"காணிவாங்குவதை விடுத்து பணத்தை ஆக்கபூர்வமான முறையில் செலவிடவேண்டும்" -- அமிர்

(மாவிட்டபுரம்)

"வெளியிடங்களில் வாழும் நமது மக்கள் தாம் உழைக்கும் பணத்தில் யாழ்ப்பாணத்தில் காணி வாங்குவதிலேயே அதிகம் செலவுசெய்கிறார்கள். காணிகள் வாங்குவதுடன் நின்றுவிடாது எமது பிரதேசங்களில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் எமது பிரதேசங்கள் முன்னேற்றமடையமுடியும்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறைத் தொகுதி எம்.பியுமான திரு அ. அமிர்தலிங்கம் அளவெட்டி வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை புதிய கட்டிடத் திறப்பு விழாவிலும், கவன் நீர் வழங்கும் வைபவத்திலும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. வரதராஜப்பெருமாள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. அமிர்தலிங்கம் புதிய கட்டிடங்களைத் திறந்து வைத்தார். வடமாநிலக் கல்வியதிபதி திரு. இ. மாணிக்கவாசகர் நீர்வழங்கலைத் திறந்துவைத்தார். சுன்னாகம் பொலிஸ் அதிபர் திரு சுகுணேந்திரன் கவன் நீரை வழங்கினார்.

திரு. அ. அமிர்தலிங்கம் இங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இன்று நமது மக்கள் பல வேறு இக்கட்டுகள் மத்தியில் வாழ்கிறார்கள். எமது மாணவர்களது உயர்கல்விக்கு பல தடைகளைப் போட்டு திட்டமிட்டு சதி செய்யப்படுகிறது. எமது மக்களை கைக்கூலிகளாக வைத்துசெயல்பட சில சக்திகள் முயல்கின்றன. பெருமையும், பாரம்பரியமும் மிக்க எமது இனத்தின் எதிர்காலத்தில் நாம் நம்பிக்கை வைத்து செயல்படவேண்டும்.

எமது பகுதியில் உள்ள பாடசாலைகளை வளர்ப்பதன் மூலம் எமது பிள்ளைகளுக்கு கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து பலவேலைகளை மேற்கொள்ளப்படுகின்றன. பாடசாலைகளில் கட்டிடங்கள் அமைத்துக் கொடுத்தால் மட்டும் போதாது. ஆசிரியர்கள் தமது பொறுப்பை உணர்ந்து செயல் புரியவேண்டும். மாணவர்களும் கல்வியில் கவனம்செலுத்த வேண்டும். இன்று யாழ்மாவட்டத்தில் 1000க்கு மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது இவற்றை தீர்த்துவைக்க வேண்டியதும் அவசியமாகின்றது" என்றார்.

வடமாநில வித்தியாதிபதி திரு இ. மாணிக்கவாசகர், சுன்னாகம் பொலிஸ் அதிபர் திரு சுகுணேந்திரன், காங்கேசன்துறை வட்டார வித்தியாதரிசி திரு பொ சிவபாதசுந்தரம், திருமதி அமிர்தலிங்கம் உட்பட பலர் பேசினர் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நாட்டுக்கும்சமுதாயத்துக்கும் உழைக்கும் வாலிபர்கள்

யாழ். ஆயர் பாராட்டுகிறார்

(உடுப்பிட்டி)

"சில இளைஞர்கள் பணம் சம்பாதிப்பதற்காகத் தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் சென்று, அந்நாடுகளின் முன்னேற்றத்திற்காக உழைக்கின்றனர் இத்தகையவர்களால் நமது நாட்டுக்குப் பிரயோசனமில்லை ஆனால் எமது வாலிபர்கள் பலர், எமது நாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டு, நாட்டுக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் உழைப்பதுடன், வேலையில்லாப் பிரச்சினையையும்போக்கிவருகின்றனர்"

இவ்வாறு யாழ் ஆயர் அதிவந். தியோகுப்பிள்ளை ஆண்டகை உருத்திரபுரத்தில் மாதாபுரி இளம் விவசாயிகள் பண்ணையைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இத்திறப்புவிழா கோசி ஸ்தாபன அதிபர் வண. பிதா ஏ. ஜே. மதுரநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இத்திறப்புவிழாவில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறியதாவது:

"விவசாயப் பண்ணைகள் மூலமே எமது நாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தமுடியும். இத்தகைய விவசாயத் திட்டங்கள் எமது நாட்டுக்கும், இளைஞர்களுக்கும் இன்றியமையாதன. கத்தோலிக்க குருமார்களும், துறவிகளும் சமயப் பணியுடன் மாத்திரம் நின்றுவிடாது விவசாயப் பண்ணைகளையும் ஆரம்பித்து நடாத்திவருவது பெரும் சாதனையும் முன்மாதிரியுமாகும்.

இத்தகைய திட்டங்களுக்கு என்னாலியன்றளவு உதவுவதுடன், அரசாங்க உதவிகளையும் பெற்றுத்தருவேன் கோசிஸ்தாபனம் இத்தொகுதியில் பல அபிவிருத்திப் பணிகளையும், சேவைகளையும் செய்துவருவது பாராட்டுக்குரியது" என்றார்.

மக்கள் கருத்து

வீடியோ கஸட் சினிமா!

வீடியோ கசற் மூலம் சினிமாப்படங்கள், தொலைக்காட்சியில் பொதுமக்களுக்கு சில ஸ்தாபனங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் காட்டப்படுவது யாவரும் அறிந்ததே.

வீடியோ மூலம் சினிமா காட்டுவோர் அவற்றை கடத்தல்செய்து பொதுமக்களுக்கு காட்டுகிறார்களென்ற கருத்துப்பட பல பத்திரிகைகளில் செய்திவந்துள்ளது. இச்செய்தி முழுக்கத் தவறானதாகும். வீடியோ மூலம் காட்டப்படும் சினிமாப்படங்கள் கடத்தல் செய்யப்பட்டவை அல்ல, வரவழைக்கப்பட்டவை என்பதைப்புரிந்துகொள்ளவேண்டும் 36 m. m. சினிமாப்படங்களை மட்டுந்தான் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் தவிர்ந்த ஏனையோர் இறக்குமதி செய்யக்கூடாதென்பது சட்டம். அதைமீறி யாரும் இறக்குமதி செய்வதில்லை. வெளிநாட்டில் (சிங்கப்பூர்) தொலைக்காட்சியில் ஒலிபரப்பான படங்களைத்தான் வீடியோ கசற்றில் பதிவு செய்து இங்கு பொதுமக்களுக்குக் காட்டுகிறார்கள் இதில் என்ன தவறு? இன்னும் சில படங்கள் சனிக்கிழமைகளில் சென்னை தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்பாகி வடமாகாணத்தில் வீடியோவில் பதியப்படுபவையாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தரமான தமிழ்ப்படங்களை இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்யவில்லை பழையபடங்களை எத்தனை நாட்களுக்குத்தான் ரசிகர்கள் பார்ப்பது? வீடியோ தொலைக்காட்சி சாதனத்தின் ஆகக்கூடிய அளவு 28 அங்குல குறுக்களவு மட்டுமே. இத்தனை சிறிய அளவிலான படத்தை ரசிகர்கள் தோட்டவெளிகளிலும் வயல்களிலும் இருந்து பார்ப்பதற்கு இரண்டு ரூபா அறவிடுவதை பத்திரிகைகள் மூலம் சிலர் போதாது என்று குறைபடுவது ஏன்?

வீடியோ தொலைக்காட்சி மூலம் காட்டப்படும் படங்களைத் தடைசெய்யவேண்டுமென்றால் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் சென்னையிலிருந்து அஞ்சலாகும் தொலைக்காட்சியில் சினிமாப்படங்கள் காட்டப்படுகிறதே அதையும் தடைசெய்ய வேண்டுமென கோரிக்கை எழுப்பபடுமா?

மேற்கூறிய விளக்கத்தின் படி வீடியோ கசற்மூலம் காட்டப்படும் படங்கள் சட்டத்தை மீறிய செயல் அல்ல, "சர்க்கரை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை" என்பது போல தரமான படங்கள் சினிமாத் தியேட்டர்களில் காட்டப்படாமையால் விரக்தி கொண்ட ரசிகர்கள் பல இன்னல்களோடு வீடியோ கசற் மூலம் குறைந்த கட்டணத்தில் பல தரமான படங்களை பார்த்துமகிழ்கின்றார்கள் இதற்குரிய வரி கிராமசபைகளுக்கும் பட்டண சபைகளுக்கும், மாநகர சபைகளுக்கும் அமைப்பாளர்கள் மூலம் செலுத்தப்படுகிறது ஆகையால் வீடியோ தொலைக்காட்சிப் பிரச்சினை அரசாங்கத்தையோ திரைப்படக் கூட்டுத்தாபனத்தையோ பாதிப்பதாக விளங்கமுடியவில்லை;

குணம்

யாழ்ப்பாணம்.

⁂

பஸ்ஸில் துர்நாற்றம்

கட்டுவன் மயிலிட்டி ரூட் 799 பஸ் வண்டியில் மீன்ஏற்றுவது காரணமாக பிரயாணிகள் செல்வது கஷ்டமாகவும் துர்நாற்றமாகவும் இருக்கிறது.

இப்பிரச்சினை வேறு பல பஸ் வண்டிகளில் இல்லை. இதற்குக் காரணம் சாரதியும், நடத்துநருமாகும். பெரும்பாலான பிரயாணிகள் இந்த பஸ் வண்டியை நாடுவதும் இல்லை. அத்துடன் இப்பஸ்வண்டி ஒழுங்காகச் செல்வதுமில்லை. இதற்கு தீர்வுகாணுமுகமாக, மீனை பஸ் வண்டியில் ஏற்றாது, வேறுவாகனம்மூலமாக பொதுமக்கள் இதை எடுத்துச் செல்லவும். சாரதியும், நடத்துநரும் இவற்றை தயவு செய்து ஏற்றாமல் விடவும். பிரயாணிகளின் நன்மைகருதி இவற்றை சம்பந்தப்பட்டோர் கவனத்தில் கொள்ளவும்.

ரமணி, குரு, சிவராசன்

கட்டுவன் தெற்கு,
மயிலிட்டி.

தபாற்பெட்டி வருமா?

மிருசுவில் தபாற்கந்தோரிலிருந்து மிருசுவில் வடக்குநோக்கிச் செல்லும் ரோட்டின் நீளம் 2 மைல்களாகும். அந்த 2மைல் தூரத்திற்குள் கொடிகாமம், கோவிற்குளம், குருக்கள் மாவடி, மன்னன் குறிச்சி போன்ற பல குறிச்சிகளுள்ளன. இந்தக் குறிச்சியிலுள்ளவர்களின் நலன்கருதி தபால்பெட்டியொன்று தபாற்பகுதியினரால் மிருசுவில் வடக்கு வாசிகசாலை முன்றலில் பல காலமாக வைக்கப்பட்டு வந்துள்ளது. இத்தபால்பெட்டி பழுதடைந்துவிட்டதால் மிருசுவில் தபாற்கந்தோரினால் அத்தபால்பெட்டி எடுக்கப்பட்டு திருத்தம் செய்வதற்காக சேவிடத்திற்கு அனுப்பி 2வருடங்களுக்கு மேலாகியும் அந்தபால் பெட்டி இன்னுமே வந்தபாடில்லை. இதனால் அப்பகுதியில் வாழும் மக்கள் தங்கள் கடிதங்களை தபாலில் சேர்ப்பதற்கு 2 மைல்கள்தூரம்நடந்து மிருசுவில் தபாற்கந்தோருக்கு வரவேண்டிய அவலநிலை உருவாகியுள்ளது. இது விடயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பார்களா?

ஆர். எஸ். நாதன்,

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

⁂

ஒரு விளக்கம்

சுன்னாகம் ப. நோ. கூ. ச. இயக்குநர் சபை விடயம் தொடர்பாக 1979-10-30-ந் திகதிய "ஈழநாடு" பிரசுரத்தின் இரண்டாம் பக்கத்தில் வெளிவந்த செய்திபற்றி பின்வரும் குறிப்பை தெரிவிக்க விரும்புகிறேன்.

அதாவது, குறித்த இயக்குநர்சபைக்கு க. விசுவலிங்கம் ஆகிய நானும், திரு. எஸ். குமாரவேல் அவர்களும் சமமான வாக்குகளை, அதாவது தலா 79 வாக்குகள் பெற்றிருந்தோம். இவ்வாறு சமமான வாக்குகளைப் பெற்றுள்ள இருவரில் ஒருவரை மட்டும் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தமை உண்மையை மறைப்பதாக அமைந்துள்ளது. இதனை ஒருவர் மீதும் குறைகூறும் நோக்குடன் எழுதவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் இதன் உண்மையை தெளிவுபடுத்த விரும்பியே எழுதுகின்றேன்.

க. விசுவலிங்கம்.

சுன்னாகம் ப. நோ. கூ. ச.
இயக்குநர்சபை உறுப்பினர்.

'சந்தர்ப்ப வாதம் நிலையான பயனைதராது'

'அமிர்' தரும் விளக்கம்

(மாவிட்டபுரம்)

"உலகத்திலே வாழ்ந்த நிலையிலிருந்த பல சமுதாயங்கள் இன்று முன்னேற்றமடைந்துள்ளன. நிலையாக எவரும் உயர்ந்த [illegible] நிலையிலோ இழிவு நிலையிலோ நாம் இப்போது தாழ்ந்திருந்தாலும் உயர்ந்தோம் ஒன்று வந்தே தீரும். சரியபாதையில் நேர்மையாகசெயல்பட்டால் எமது [illegible] வெற்றிபெறமுடியும்"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கொல்லங்கலட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டுபேசுகையில்கூறினார்.

வித்தியாசாலை அதிபர் திரு: வ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசும்போது கூறியதாவது:

"நாம் இன்று பல இன்னல்களுக்கிடையில் வாழ்ந்துவருகிறோம். இந்த நேரத்தில் நாம் உறுதிதளராது செயல்பட வேண்டியுள்ளோம். சிலர் சந்தர்ப்பத்திற்கேற்றவாறுநடந்து கொள்ளலாம் என்று நினைத்து செயல்படுகிறார்கள். ஆனால் அது பல நாளைக்கு நிலைக்காது. சமுதாயத்துடன் ஒன்றிணைந்துசெயல்படுவதன் மூலம் தான் எமது உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள முடியும். உயர்வோ, தாழ்வோ எதுவும்

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ்.

பல்கலைக்கழக மாணவர் தலைவர் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

"பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் காலத்தில் தோட்டத்துரைமார்கள் தோட்டத் தொழிலாளர்களை அடிமைகளாக ஆட்டிப்படைத்து, உழைப்பையும் உறிஞ்சி வாழ்ந்தனர். அந்தக்கால கட்டத்தில் எந்த ஒரு தொழிலாளியும் கொலைசெய்யப்படவில்லை. ஆனால் அண்மைக்காலங்களில் பல தோட்டத்தொழிலாளர்கள் மிலேச்சத்தனமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர்'

சென்றகிழமை பல்லேகலையில் ரஜவெலத் தோட்டத்தில் ஒரு காவலாளியாக தமிழ்த் தொழிலாளி ஒருவர் சுடப்பட்டது தொடர்பாகயாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் செ தெய்வேந்திரராஜா வெளியிட்டுள்ள கண்டனச்செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

1956ல் [illegible], 1977ல் இலட்சுமணன், பலியெடுக்கப்பட்டனர் இன்று பழனிவேல் தனது சிறுநீரகம் பாதிக்கப்பட்டு கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் இருந்து வருகின்றார். இவ்வாறான சம்பவங்கள் இனி மேலும் நடைபெறாது இருக்க வேண்டும் என பல்கலைக்கழகத்தின் அனைத்துமாணவர்களின் சார்பிலும் வேண்டுகின்றேன்'' என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

சைவப் புலவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற முயற்சி

(யாழ்ப்பாணம்)

சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்து வேலையற்றிருக்கும் புலவர்களுக்குப் பாடசாலைகளில் இந்து சமயம் பாட ஆசிரிய நியமனம் வழங்கும் வாய்ப்பினை மாவட்ட அமைச்சருடன் ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதற்காக அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் விபரங்களைக் கோரியுள்ளது.

சைவப் புலவர்களாக வேலையற்றிருப்போர் தம்மைப் பற்றிய முழு விபரங்களையும் உடனடியாகத் தமக்கு அறிவிக்குமாறு கொக்குவிலில் உள்ள அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கச் செயலாளர் திரு: மு. திருஞானசம்பந்தபிள்ளை கோரிக்கை விடுத்துள்ளார். (நா)

இந்திராவுடன் சேரும் வாய்ப்பை இழக்கவில்லை

பஹுகுணா விளக்கம்

புதுடில்லி நவ. 4

இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேரும் வாய்ப்பை தான் இன்னமும் இழந்துவிடவில்லை என்று ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. பஹுகுணா கூறினார்.

இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் சேரும் போது அடிப்படைக் கொள்கையை விட்டுக் கொடுக்கமாட்டேன் என்றும் கூறிய திரு. பஹுகுணா தாம் இந்திரா காங்கிரசுடன் சேருவது தொடர்பாக இதுவரை எவரையும் சந்திக்கவில்லை என்றும் இதே வேளையில் உத்தியோக பூர்வ காங்கிரஸ் கட்சியுடன் சேர்வது குறித்து பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாகவும் தெரிவித்தார். (ரு)

சிங்கள மகாவித்தியாலயத்தில் தமிழ் மாணவர் சாதனை

(யாழ்ப்பாணம்)

சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கிய மாணவர்கள் கல்வி கற்கும் சிங்கள மகாவித்தியாலயத்தில் இறுதித் தவணையின் போது நடைபெற்ற சிங்கள எழுத்துப் பரீட்சையில் ஒரு வகுப்புத் தவிர்ந்த ஏனைய சகல வகுப்புக்களிலும் தமிழ் மாணவர்களே கூடுதலான புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

கூடுதலான சிங்களப் பிள்ளைகள் கல்வி பயிலும் யாழ் சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பரீட்சையிலேயே தமிழ்ப் பிள்ளைகள் முதலிடங்களைப் பெற்றனர்.

மேற்படி மகாவித்தியாலயத்தில் கல்வி போதிக்கும் சிங்கள ஆசிரியர்களே இவ்விடைத் தாள்களைத் திருத்தியுள்ளனர். தமிழ்ப்பிள்ளைகள் என்றும் சிங்களப்பிள்ளைகள் என்றும் வித்தியாசம் பாராட்டாது திறமைசாலிகளுக்கு முதலிடம் கொடுத்த யாழ். சிங்கள மகாவித்தியாலய ஆசிரியர்களை தமிழ்ப் பெற்றோர் பாராட்டியுள்ளனர். இவர்களைப் போன்று கல்வி இலாகாவும் பரீட்சைத் திணைக்களமும் பாடசாலைப்பிள்ளைகளின் கல்வியில் திறமைசாலிகளுக்கே முதலிடம் வழங்கவேண்டுமென விரும்புகின்றனர்.

யாழ். சிங்கள மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கம் பரீட்சையில் முதலிடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு தவணை முடிவில் பரிசில்கள் வழங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

முதலிடத்தைப் பெற்ற மாணவர்களின் பெயரும் பின்வருமாறு!

ஆறாம் வகுப்பு! செல்வி றெஜினா எலிசபெத் ஜின். ஏழாம் வகுப்பு! செல்வி ஏ விஜயா. எட்டாம் வகுப்பு- செல்வி வி புவனசுந்தரி. ஒன்பதாம் வகுப்பு! செல்வி சாரதா செல்லத்துரை. பத்தாம் வகுப்பு; செல்வன் எஸ் நாகதாஸ். பதினொராம் வகுப்பு! செல்வி ஏ கீதாஞ்சலி. பன்னிரண்டாம் வகுப்பு! செல்வி அர்சலா இம்மானுவேல். (கொ)

இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 19-ம் திகதி திங்கட்கிழமை

(5-11-1979)

மேடம்: பொருள்களைவிட்டுக்கொடுக்கும். மற்றவர்களிடத்தில் பொருள் வாங்கு கேட்க நேரிடும். இந்நிலையால் தொல்லைகள் உண்டாகும் எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

இடபம்: துன்பத்தின் சாயல் மனதிலே படியும் சிலர் உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக்கொள்ள நேரிடும். நன்கு சிந்தித்தபின் செயலாற்றுக.

மிதுனம்: திடீர்திருப்பம் வாழ்க்கையை வளப்படுத்தும் சுற்றாடலில் மதிப்பு உயரும். தனச்சிறப்புக்கும் இடமுண்டு. சுபதினம்.

கடகம்: உணர்ச்சி மயமானதினம் உடல்நலனும் பாதிக்கப்படலாம். குடும்பத்தில் ஏற்படும் சோதனைகள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

சிங்கம். ஆராய்ச்சியில் அதிக ஆர்வம் தோன்றும் வியாபார முன்னேற்றமுண்டு தாய்வழிப் பொருள்வரவுக்கும் இடமுண்டு.

கன்னி: நீண்டநாள் சந்திப்பு இன்று நிகழும். கணவன் மனைவி உறவு குதூகலமானதாகவிருக்கும். [illegible] நகைச்சுவையுடன் இல்லத்தில் இனிமை தவழும்.

துலாம்: ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். சிலருக்கு அன்னியவாசமும் அகால போஷணமும் உண்டு. சிறு பிணிக்குமிடமுண்டு.

விருச்சிகம்: அதிதிகளின் வருகை உற்சாகப்படுத்தும் களஸ்திரவழியாலும் கண்ணியம் சேரும் மகிழ்ச்சிகரமான செய்தியொன்றும் இன்று கிடைக்கும்.

தனு: முயற்சிகளில் முட்டுக்கட்டை தென்படும். விபத்திற் இடமேற்படும். உணர்ந்துடன் பழகுபவர்கள் எச்சரிக்கையாக இருக்கவும்.

மகரம்: பொதுத்துறையில் உங்கள் செல்வாக்கு பெருகும் குறிக்கோளில் வெற்றியுண்டு. பிதாவழியால் நன்மையும் ஏற்படும்.

கும்பம்: எதிர்பாராதவிடத்திலிருந்து அழைப்பிதழ்கிடைக்கும் தொழில்துறையில் முயற்சிகள் [illegible] தொடர்புகளில் திருப்தியுண்டு.

மீனம்: முதலீட்டுச் செய்யும் தொழிலில் லாபம் கிடைக்கலாம். விருந்து வைபவத்திற்கு இடமுண்டு.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

சந்தர்ப்ப...

[3ம் பக்கத் தொடர்ச்சி

எமக்கேதான் என்பதை உணர வேண்டும்."

வடமாநில கல்வியதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் பேசுகையில்:- "எமது முன்னோர்கள் பலர் தமது உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்து சிறந்த கல்விப்பணியாற்றியுள்ளனர். இவர்களைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சிகள் செய்து அவர்களைப் பற்றிய விபரங்கள் வெளியிடப்படல் வேண்டும். அவற்றை எமது மாணவ சமுதாயம் அறிந்து அவர்கள் வழியில் ஒழுகுதல் வேண்டும் என்றார்;

காங்கேசன்துறை வட்டாரக் கல்விஅதிகாரி திரு. பொ. இலஞ்ஞானசுந்தரம் உட்பட பலர் பேசினர் கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. (ரு)

சட்டசபை கலைக்கப்பட்டது

புதுடில்லி நவ 4

இந்திய வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான அருணாசலப் பிரதேச மாநில சட்டசபை அரசியல் நெருக்கடி காரணமாகக் கலைக்கப்பட்டுள்ளது.

இங்கு அடுத்த நான்கு மாதங்களுக்கு ஜனாதிபதி ஆட்சி அமுலிலிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ரு)

பரிசு பெற்றனர்

[பண்டத்தரிப்பு]

மாதகல் சென் ஜோசப் மகாவித்தியாலயத்தில் ஆங்கில தின விழாவையொட்டி நடாத்தப்பட்ட ஆங்கில மொழியிலான பல்வேறு போட்டிகளிலும் வெற்றியீட்டி முதலாமிடத்தைப் பெற்ற செல்வன் ச. பாரததாசுக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

இவ்வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆங்கில தின விழாவில் அதிதியாகக் கலந்துகொண்ட ஆங்கில ஆசிரியை திருமதி ஆர். குமார் இந்த வெற்றிக்கிண்ணத்தை வழங்கினார். மூன்றாம் வகுப்பில் கல்வி கற்றுவரும் 9 வயதுள்ள செல்வன் பாரததாஸ், பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் திரு. சண்முகசுந்தரம் தம்பதிகளின் புதல்வராவார். (அ)

அராலிப்பாதைக்கு மேலும் ஒரு புதிய பஸ்

சாலை அத்தியட்சகர் உறுதி

[யாழ்ப்பாணம்]

வடபிராந்தியப் போக்குவரத்துச்சபைக்குப் புதிய பஸ்கள் வழங்கப்பட்டவுடன், அராலி பஸ் பிரயாணிகளின் குறைகளைப் போக்கும்பொருட்டு மேலுமொரு பஸ்வண்டி அராலிப் பாதையில் சேவைக்கு விடப்படும். அத்துடன் சேவையிலுள்ள மூன்று பஸ் வண்டிகளும் திருப்திகரமான சேவைசெய்ய வழிசெய்யப்படும்.

இவ்வாறு வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை அத்தியட்சகர் திரு. எஸ். மயில்வாகனம், தம்மைச் சந்தித்த அராலி பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. விக்கினேஸ்வரகடாட்சத்திடமும், செயலாளர் டாக்டர் ச. மார்க்கண்டேயரிடமும் உறுதியளித்தார்.

இச்சந்திப்பு கோண்டாவில் சாலை வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

தூதுக் குழுவினர், சாலை அத்தியட்சகரிடம் தமது குறைகளை விளக்குகையில் "தினமும் காலை 7-00 மணி முதல் 10-00 மணி வரை பஸ் பிரயாணிகளின் பெருந்தொகையினர் பஸ் பற்றாக்குறை. இட நெருக்கடி காரணமாகத் தொழில் ஸ்தலங்களுக்குச் செல்வதில் கஷ்டமுறுகின்றனர் என்றும் 789 பஸ் சேவை இப்பகுதி மக்களுக்குச் சரியாகச் சேவை செய்யவில்லையென்றும் கூறப்பட்டது.

50 ரூபா சம்பள உயர்வு: 80 முதலாளிகள் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தீர்மானத்தை ஏற்று இதுவரை 80 முதலாளிமார் ஆயிரம் சுருட்டுக்கு ஐம்பது ரூபா கூலி வழங்குவதாகப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளையில், ஆயிரம் சுருட்டுக்கு 50 ரூபா சம்பள உயர்வு கோரித் தொழிலாளர்கள் வேலையை பகிஷ்கரித்து, இரண்டு சங்கங்களின் மூலம் கருத்தரங்குகள் நடாத்திப் போராடிவருகின்றனர்.

கூலி உயர்வு பற்றி, இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தமது வெளியீட்டில், "1,000 சுருட்டுக்கு 50 ரூபா ஊதியம் வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கை நியாயமானது சாதாரண சுருட்டுத் தொழிலாளி, மூன்று தினங்களில் 50 ரூபாவை ஊதியமாகப் பெறமுடியும். வாழ்க்கைச் செலவு அதிகரித்துவரும் இன்றைய நாட்களில் ஒரு சுருட்டுத் தொழிலாளி, தான் பெறும் வருமானத்தில் தனது குடும்பத்தைச் சமாளிக்கமுடியாது" என்றார். (வே)

இடமாற்றம்

(கனகராயன்குளம்)

கனகராயன்குளம் கமநல சேவை நிலைய அலுவலக விவசாய சேவையாளராக இம்மாதம் முதல் செல்வி ஹட்சன் சரஸ்வதி இடமாற்றம் பெற்றுள்ளார். (அ)



நெற்பயிர்ச் செய்கையில்
ஓர் சிக்கன சாதனம்-ஒரு
'கிரமக்சோன்'
போத்தலும்
ஒரு தடவை
உழுதலும் ஆகும்

வயலில் கிரமக்சோன் தெளிக்கவும்.

மூன்று நாட்களில் தண்ணீர் கட்டவும். ஏழு நாட்களுக்கு நீர் கட்டிவிடவும்.

நீரை வடியவிட்டு ஒரு முறை உழவும்.

வயலை மட்டம் படுத்தவும்.

நெல்லை விதைக்கவும் அல்லது நாட்டவும்.

கெமிக்கல் இண்டஸ்ரீஸ்
(கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. இலக்கம் 352
கொழும்பு 1

இத்துடன் இணைக்கப்பட்ட கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பவும். உங்களுக்கு வேண்டிய உதவிக்கு எமது சேவையாளரை அனுப்புவோம்.

கூப்பன்

பெயர் ______________________

விலாசம் ______________________

வேண்டியசேவைகள் ______________________

RAJAH A TODAY ONLY
JAFFNA. Daily at 10-30 a m 2-00, 4-30, 7-00, & 9-30 p.m.
PETER FONDA IN
FIGHTING MAD
(F)பைட்டிங் மாட்
(Color by Deluxe)
(Strictly for Adults)
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

வின்ஸர் தினசரி 10-30, பி.ப 2-30
யாழ்ப்பாணம் 6-30, 9-30
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
பாக்தாத் பேரழகி
(புதிய பிரதி)

வெலிங்டன் தினசரி 3 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) சனி-ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — லதா
நீதிக்கு தலைவணங்கு (புதிய பிரதி)

லிடோ (யாழ்நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
பணத்தோட்டம்

5-வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் தினசரி காலை 10-30, பி ப 2 30, 6-15, 9-45
(யாழ் நகர்) சிவாஜிகணேசன்-சுஜாதா
நடித்த
தீபம் (வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

"மொழிபெயர்ப்பு நாடகங்களை

தமிழ் நாடக உலகு புறக்கணிப்பது கவலை"

(யாழ்ப்பாணம்)

"தமிழ் நாடகமரபு நீண்ட காலப் பழமையுடையது. ஆனால் தரமான நாடகாசிரியர் ஒருவரும் இல்லை."

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ் பல்கலைக்கழக இலக்கிய மன்றத்தின் வெளியீடான "ஆறு நாடகங்கள்" என்ற நூலை விமர்சித்துப் பேசிய பொருளியல்துறை விரிவுரையாளர் திரு மு. நித்தியானந்தன் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் தமிழ் நாடக உலகு மொழிபெயர்ப்பு நாடகங்களைப் புறக்கணிப்பது விசனத்துக்குரியது என்றும், உலக ரீதியில் பொதுவான ஒருநாடக பாரம்பரியத்தைத் தமிழ் நாடக உலகு பெற்றுக்கொள்வதற்கு இம்மொழிபெயர்ப்பு நாடகங்களின் உதவி அத்தியாவசியம் என்றும் கூறினார்.

காலை நடைபெற்ற கருத்தரங்கிற்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமை வகித்தார். திரு சி. மௌனகுரு, திரு அ. தாசீசியஸ், திரு க. சண்முகலிங்கம், திரு எம். பொன்னுத்துரை, திரு அ. பாலேந்திரா, திருமதி நிர்மலா நித்தியானந்தன் ஆகியோரும் கருத்துக்களை வழங்கினர்.

கலை நிகழ்ச்சியில் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியினரும் பல்கலைக்கழக மாணவர் நிகழ்த்தினர். மஹாகவியின் 'புதிய தொருவீடு' நாடகமும் இடம் பெற்றது. செல்வி சுமத்திரி சிவசுப்பிரமணியம் நன்றி தெரிவித்துப் பேசினார். [நா]

RIO Jaffna Phone: 7607
Daily 10-30 a.m. 4-45, 7-00 & 9-30 p.m.
CONVOY

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30,
சனி, ஞாயிறு 2-30
சிவகுமார்-பத்மினி
சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சாவித்திரி
கைகொடுத்த
தெய்வம்

100 மலகூடம்

கரணவாய் தெற்கு வல்லுவர் சனசமூக நிலையம் இக்கிராமத்தில் சுமார் 100 மலகூடங்களை இலங்கை தேசிய இளைஞர் சேவைமன்றம், சர்வோதய இயக்கம் ஆகியவற்றின் உதவியுடன் அமைக்கவிருக்கிறது.

இச்சனசமூகநிலையம் ஏற்கனவே ஒரு பொதுக்கிணறும் வெட்டி முடியும் தருவாயில் இருக்கிறது.

நாவலர் விழா

கொக்குவில் சுதுபுலத்து மனோன்மணி அம்பாள் இந்து சமய அபிவிருத்திச் சங்கம் எதிர்வரும் 7ம் திகதி மாலை நாவலர் விழாவைக் கொண்டாடவிருக்கிறது.

நாவலர் பெருமான் பற்றிப் பேச்சுப்போட்டிகளும், [illegible], கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

மகஜர்

வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுச்சபைக்கூட்டம் சென்ற மாதம் 13ம் திகதி நடைபெற்றது. செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிக்குமாறு கோரும் பதினொரு குற்றச்சாட்டுகள் கொண்ட மகஜர் ஒன்றை மேற்படி சங்கத்தினைச் சேர்ந்த கட்டப் பிரதிநிதி திரு. தா. இராசரத்தினம், கூட்டுறவு ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மாதிரிக் கிராமத்தில்...

மாதிரிக் கிராமத் திட்டத்தின், [illegible] கட்டப்பட்டிருக்கும் வீடுகளில் 1978 கோஷ்டிக்கலவரத்தில் உயிர் நீத்த இருவரின் பிள்ளைகளுக்கும் இருவீடுகள் கிடைத்திருக்கின்றன.

இவ்வீடுகள் இரண்டையும் சரவெட்டி சனசமூக நிலைய உத்தியோகத்தர்கள் நிலையச்சார்பில் பொறுப்பேற்றுச் செய்துவருவதுடன் மற்றும் வீடுகட்ட உதவிமற்றவர்களுக்கு சிரமதானமூலம் செய்து வருகின்றனர்.

தேவரையாளி இந்துக்கல்லூரி வெற்றிபெற்றது

உடுப்பிட்டித்தொகுதி பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 13 வயதிற்குட்பட்ட 'பேபிலெவல்' உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

தேவரையாளி இந்துக்கல்லூரிக்கும், வதிரி திருஇருதயக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற இப்போட்டியில் தேவரையாளி இந்துக்கல்லூரியினர் 5-1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றதுடன் 1979ம் ஆண்டுக்கான உடுப்பிட்டித் தொகுதிக்கான 'பேபிலெவல்' உதைபந்தாட்ட வெற்றிவீரர்களாகத் தெரிவுசெய்யப்பெற்றனர். இப்போட்டிக்கு திரு எம. எஸ். கமலநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். [ச]

நயினை வடக்கு கி. மு. சங்கம்

நயினாதீவு வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இருவரும் சமூகமளித்திருந்தனர். தலைவராக திரு. நா. வை. கணபதிப்பிள்ளையும் செயலாளராக திரு நா க குமாரசூரியரும் பொருளாளராக திரு த பரமேஸ்வரனும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். ஆறு பேர்கள் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். [நா]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

REGAL (Jaffna) Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
The Long Awaited APACHE War film in Techni Color
The only thing that made them alike was the difference between them
BURT LANCASTER in
'ULZANA'S RAID
Co-starring: BRUCE DAVISON - RICHARD JAECKEL
A Universal Picture
One man alone understood
The early savagery of the
Early American West
R RESTRICTED
Under 17 years requires
Accompanying parent or Adults

5-வது ஜனத்திரள் வாரம்
மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன் சுஜாதா
சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன், மனோரமா, சுகுமாரி
மற்றும் முன்னணி நடிகர்களும் நடித்திருக்கிறார்கள்.
முக்தா பிலிம்சாரின்
அந்தமான் காதலி
இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணப்படம்)

வெற்றி முழங்கும் 3வது ஜனத்திரள் வாரம்!
மக்கள் கலைஞர் - ஜேம்ஸ் பொன்ட் - ஜெய்சங்கரின்
150 வது வெற்றிப் படைப்பு
சாந்தி யாழ்நகர்.
போன்: 7642. தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
● ஜெய்சங்கர் ● ஸ்ரீ தேவி ● ஸ்ரீ காந்த் ● அசோகன்
● [illegible] ● மனோரமா ● சுருளிராஜன்
டாக்ஸிடிரைவர்
சண்டைக்காட்சிகள் நிறைந்த வண்ணப்படம்.



RANEE CINEMA-
Jaffna
Daily 5 Shows
at 10-30 a m 2-15, 4-45, 7-15&9-45p m
THE EXORCIST
COLOR
DO NOT MISS!
"த எக்ஸோர்சிஸ்ற்"
(அதிபயங்கர சித்திரம்)
(YOU SEE THIS FILM AT YOUR OWN RISK)
(ADULTS ONLY)

சைக்கிளில் சென்ற

இளம்பெண்ணை பயமுறுத்தி சைக்கிள் அபகரிப்பு!

பொதுமக்கள் துரத்திப் பிடித்தனர்!

(பண்டத்தரிப்பு)

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளம் பெண்ணை வழி மறித்து, பயமுறுத்தி, சைக்கிளைப் பறித்துக்கொண்டு ஓடிய வாலிபரை பொதுமக்கள் துரத்திப் பிடித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அளவெட்டியைச் சேர்ந்த 14 வயது இளம் பெண்ணான கலாலோஜினி என்பவர் தனது சைக்கிளில் ஒருக்கை வைரவர் கோவிலடியிலிருந்து தனது வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பக்கமாக வந்த வாலிபர் ஒருவர் அவரை வழிமறித்து பயமுறுத்தி சைக்கிளைப் பறித்துக்கொண்டு ஓடினாராம். பிரஸ்தாப இளம் பெண் குளறிக் கூச்சலிடவே வீதிவழியாக சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் விஷயமறிந்து அந்த வாலிபரை துரத்திப்பிடித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தையா சிவலிங்கம் என்னும் மேற்படி வாலிபரை பொலிசார் காவலில் வைத்துள்ளனர். சைக்கிளும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. பொலிசார் மேல்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்

எஜமானர் கண்டித்ததால் பணிப்பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

எஜமானி கண்டித்ததினால் மனவேதனையடைந்த பணிப்பெண் கிருமிநாசினி அருந்தி தற்கொலைசெய்துகொண்டார்.

முரசுமோட்டையைச் சேர்ந்த திருமதி இன்னாசி வள்ளியம்மாவின் (46 வயது) மரணவிசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

திருமதி ஆழ்வாப்பிள்ளை முத்து என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"மரணமான வள்ளியம்மா தனது வீட்டில் வேலைசெய்து வந்தாரென்றும்] இவர் தினமும் ஒவ்வொருவரைப்பற்றியும் கோள்சொல்லுவதுவழக்கமென்றும், சம்பவதினம் இதனைத் தான் கடுமையாகக் கண்டித்ததாகவும் இதனால் மனவேதனையடைந்து கிருமிநாசினி அருந்தினார் என்றும் கூறினார்.

மரணவிசாரணை அதிகாரி திரு யோகலிங்கம் மரணவிசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். [கோ]

அவசரமாக இறங்கமுயன்ற இளைஞர் துடிதுடித்துமரணம்

(யாழ்ப்பாணம்)

ஓடிக்கொண்டிருந்த ரயிலில் இருந்து அவசரமாக இறங்க முற்பட்ட இளைஞர் ஒருவர் தவறிவிழுந்து ரயில் சக்கரத்தில் அகப்பட்டு நசுங்குண்டு மரணமானார்.

இப்பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் சுன்னாகம் ரயில் நிலையத்தில் நடைபெற்றது.

சுன்னாகத்தைச்சேர்ந்த இராச மகாலிங்கம் என்ற இந்த இளைஞர் கொழும்பிலிருந்து ரயில் மூலம் தமது ஊருக்கு வந்துகொண்டிருந்ததாகவும் ரயில் சுன்னாகம் ரயில்நிலையத்தை அடைந்ததும் ரயிலில் இருந்து அவசரமாக இறங்கமுற்பட்டபோது [illegible] சக்கரங்களுக்குள் விழுந்து நசுங்குண்டு மரணமானதாகவும் மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகம் மரணவிசாரணை அதிகாரி திரு மருதலிங்கம் மரணவிசாரணையை நடாத்தி பிரேதபரிசோதனையின் பின்னர் விபத்துமரணம் எனத் தீர்ப்புவழங்கினார். [கோ-க]

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச்செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின்எப்பகுதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்

தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி! 8154

பணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

இன்று சந்திப்பு

[கொழும்பு]

கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திரு. பி. பி. இரத்தினவேலை, கல்வி அமைச்சின் சிலரும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கக் குழு இன்று சந்திக்கவிருக்கிறது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்க தலைமையில் பொதுச்செயலாளர் திரு த மகாலிங்கம், நிர்வாக செயலாளர் திரு. த சோதிநாதன், சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு ப பஞ்சலிங்கம் ஆகியோர் இத்தூதுக்குழுவில் செல்வார்கள்.

சந்திப்பின்போது ஆசிரியர்கள் சம்பந்தமான பல விடயங்கள் பற்றி கலந்துரையாடவிருக்கிறது. [ஈ]

வங்காளஜனாதிபதி இன்று வருகிறார்

(கொழும்பு)

வங்காளதேச ஜனாதிபதி திரு. ஜியா உர்ரஹ்மானும் அவரது பாரியார் பேகம் ரஹ்மானும் இன்று காலை 11 மணிக்கு விசேஷ விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைவர்.

செங்கம்பள வரவேற்புடன் அவருக்கு 21 மரியாதைக் குண்டுகளும் தீர்க்கப்படும். இராணுவத்தினரின் மரியாதை அணிவகுப்பும் இடம்பெறும். [நா]

ஆஸி. பாரத கிரிக்கெட் டெஸ்ட்

[பம்பாய்]

இங்கு நடைபெறும் இந்திய அவுஸ்திரேலிய (இறுதி) ஆறாவது கிரிக்கெட் டெஸ்டின் இரண்டாவது நாளான நேற்று அவுஸ்திரேலியா தனது முதலாவது இன்னிங்ஸில் விக்கட் எதுவும் இழக்காமல் மொத்தம் 15 ஓட்டங்கள் பெற்றது.

இதற்கு முன்னர் இந்தியா தனது முதலாவது இன்னிங்ஸில் எட்டு விக்கட்டுகள் இழப்புக்கு மொத்தம் 458 ஓட்டங்கள் எடுத்த ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

ஈரானிய......

1-ம் பக்கத் தொடர்ச்சி

'பத்திரமாக' அனுப்பிவைக்குமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கத் தூதரக ஊழியர்களை பணயம் வைத்துள்ளதாக அறியப்படுகிறது.

முன்னாள் மன்னர் ஷா, தற்போது நியுயோர்க்கில் சிகிச்சைபெற்றுவருகின்றார்.

விடுதிக்கு பணம்செலுத்தத் தவறிய வழக்குஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதியொன்றில் குடும்பத்துடன் தங்கியிருந்துவிட்டு விடுதிக்குப் பணம் செலுத்தத் தவறியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு 80ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அங்கலைக்கொடையைச் சேர்ந்த பொன்னுசாமி ஆலாசுந்தரம் தமது மனைவியுடனும் இரு பிள்ளைகளுடனும் யாழ் நகரிலுள்ள பிரபல விடுதியொன்றில் தங்கியிருந்தகாலத்தில் 2898 ரூபா 70 சதம் விடுதிக்குச் செலுத்தவேண்டியிருந்ததாகவும் அப்பணத்தைக் கட்டத்தவறியதாகவும் யாழ். பொலிஸ்நிலைய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிறிகுமார, கான்ஸ்டபிள்கள் ஜோர்ஜ், இரத்தினசபாபதி ஆகியோர் சந்தேகநபரான ஆலாசுந்தரத்திற்கு எதிராக யாழ் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்தனர்

இவ்வழக்கு யாழ்நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஆர் இராஜசிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு மீண்டும் 80ம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. [ஈ]

மின்கம்பத்துடன் மோதி இளைஞர் பலி!

(பண்டத்தரிப்பு)

பிரயாணிகளை ஏற்றிச் சென்ற வான் ஒன்றில் காப்பாளராக கடமையாற்றிய 19 வயது இளைஞர் ஒருவர் மின்கம்பத்துடன் மோதுண்டு பலியானார். இப்பரிதாப சம்பவம் சித்தங்கேணி பண்டத்தரிப்பு வீதியில் நடைபெற்றுள்ளது.

பஸ் வண்டி ஒன்றை பிரஸ்தாப வான் விலத்துகையில் மறுபக்கத்தில் நின்று பிரயாணம்செய்த மேற்படி காப்பாளரான வசாவிளானைச் சேர்ந்த பாலச்சந்திரன் என்ற இந்த இளைஞர் வீதிஓரத்தில் இருந்த மின்கம்பத்தில் மோதியதையடுத்து பலத்த காயங்களுடன் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இவரின் மரணவிசாரணை திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். எஸ். பிரகாசம் முன்னிலையில் நடைபெற்றபோது பிரேதபரிசோதனை நடாத்திய உதவி சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். தனபாலசிங்கம் சாட்சியமளித்தார். மற்றும்சாட்சிகளை பொ[illegible]சேர்ந்த திரு வேலாயுதம் ஆஜர்செய்தார். தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்த மரணவிசாரணை அதிகாரி பிரேதத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். [அ]

மண்டைதீவு

சுயவீடமைப்புத் திட்டம்

ஆணையாளர்-எம்.பி.சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கிராமத்தில் சுய உதவி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் ஐம்பது வீடுகளைக் கட்டுவது குறித்து தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் வடபிரதேச செயலாளரும் யாழ் தேசிய வீடமைப்பு இலாகா சிரேஷ்ட ஆணையாளருமான திரு பி இராமநாதன், தீவுப்பகுதி எம் பி பண்டிதர் கா பொ இரத்தினத்தைச் சந்தித்து வீடமைப்பு இடவசதிகள் குறித்து விரிவாக நேரில் ஆராய்ந்தார்.

வீடமைப்புத்திட்டம் சம்பந்தமாக மண்டைதீவு கிராமம் முழுவதையும் பார்வையிட்ட திரு பி இராமநாதன் மண்டைதீவின் தெற்குப் பகுதி நீர் வசதியுடன் கூடியதாக இருப்பதால், இப்பகுதி மிகவும் பொருத்தமானதாக இருக்கிறதென்று அபிப்பிராயம் வெளியிட்டதாகவும் இப்பகுதியிலேயே வீடுகளைக் கட்டலாம் என்று எம் பி யோசனை தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

இதனடிப்படையில் கீழ் விரைவில் ஐம்பது வீடுகள் இங்கு கட்டப்படவிருக்கின்றன.

இதுதவிர 1980ல் அல்லைப்பிட்டி, சரவணை, நாரந்தனை, ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் சுய உதவிவீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஐநூறு வீடுகள் அமைக்கப்படும் என்றும் மேற்படி சந்திப்பில் உறுதி தெரிவிக்கப்பட்டது.

தீவுப்பகுதி கடற்றொழிலாளர்களுக்கு விரைவில் முந்நூறு வீடுகள் அமைக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

ஜப்பான் பிரதமர்

(டோக்கியோ)

ஜப்பானின் புதிய பிரதமரை தேர்ந்தெடுக்கும் பொருட்டு, ஜப்பானிய பாராளுமன்றம் இன்று கூடுகிறது.

லொறி விபத்து...

1-ம் பக்கத் தொடர்ச்சி

ணம் நோக்கிவந்த லொறியொன்றுதிடீரென பாதையை விட்டு விலகி, அங்கிருந்த தூணையும் இடித்துக்கொண்டு சென்றதாகவும் அருகே குழை ஒடித்துக்கொண்டிருந்த வயோதிபர் நடரத்தினம் (வயது 52) பலத்த காயத்துக்குள்ளானார் என்றும் அருகில் நின்ற சிறிதரன் (வயது 5) ஸ்தலத்திலேயே மாண்டாரென்றும் விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

ஸ்தலத்துக்கு விரைந்த சுன்னாகம் பொலிசார் விசாரணையை மேற்கொண்டுவருகின்றனர்.

முழங்காவில் திட்டம்

(வண்ணார்பண்ணை)

1979ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த முளங்காவில் படித்தஇளைஞர் குழாய்க்கிணற்று விவசாயத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒரு லட்ச ரூபாவில் கடந்த மூன்று மாதங்களிலும் 90000 ரூபா இத்திட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு செலவு செய்யப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 65-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No; GB/3948/78 The Eelanadu P B No; 49. Telegram Eelanadu
T'Phone: 389;